**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/16** **2025.03.16**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025

### அஞ்சலமூல் வாக்கு விண்ணப்பித்தல்

### அஞ்சல் மூலம் வாக்களிக்க எதிர்பார்க்கும், அதற்குத் தகுதிபெற்ற அரச அலுவலர்கள்/ பாதுகாப்புப் பிரிவு அலுவலர்களுக்கும் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் விடுக்கப்படும் அறிவித்தல்

2025 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பில் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கோரும் காலக்கெடு, 2025 மார்ச் மாதம் 17 ஆம் திகதி (திங்கட்கிழமை) நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையவுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காத தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளின் பூரணப்படுத்திய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அஞ்சலுக்கு ஒப்படைப்பதைத் தவிர்த்து அவற்றை 2025 மார்ச் மாதம் 17 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர் தமது நிறுவனம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து ஒப்படைக்குமாறு கோரப்படுகிறது.

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி மீண்டும் நீடிக்கப்பட மாட்டாது என்பதும் மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழுவுக்காக)